# உடல் உறுப்புகளைத் தானம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்

கோலாலம்பூர், ஆக. 16–

உடல் உறுப்புகள் தேவைப் படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் தங்களின் மரணத்திற்குப் பிறகு உறுப்புகளைத் தானம் செய்வதற்கு பதிந்து கொண்டவர்களின் எண்ணிக்கை நாட்டில் குறைந்தே காணப்படுகிறது.

இதைத்தவிர மலேசியா மக்கள் தொகையில் அதிகமான நபர்களுக்கு சிறுநீரக சுத்திகரிப்பு தேவைப்படுகிறது என்று சுகாதார அமைச்சு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. அதில் பாதி நோயாளிகளுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன்வந்த நபர்களின் எண்ணிக்கை உலகிலேயே மலேசியாவில்தான் குறைவாக இருக்கிறது.

இவ்விபரங்களை மலேசியா தேசிய சிறுநீரக (என்.கே.எப்.)



அறவாரியத்தைச் சேர்ந்த டாக்டர் ஃபாட்ஹிலினா ஸக்காரியா எப்எம்டி ஆன்லைன் செய்தி நிறுவனத்திற்கு நேற்று (சனிக்கிழமை) அளித்த பேட்டியில் கூறினார்.

தற்போது மாற்று உடல் உறுப்புகளுக்காக காத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 20,000க்கு மேல் இருக்கிறது. அந்நோயாளிகளில் 90 சதவீதத்தினர் மாற்று சிறுநீரகத்திற்காக காத்திருக்கிறார்கள். மற்றவர்கள் கல்லீரல், இருதயம் மற்றும் நுரையீரல் போன்ற உறுப்புக்களுக்காக காத்திருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

நாள்பட்ட சிறுநீரக நோயின் இறுதிக்கட்டத்தில் (ஐந்தாவது படி நிலை) இருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களாக அதிகரித்துக் கொண்டே போகிறது. எனினும் மாற்று சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சைகளின் எண்ணிக்கை நாட்டில் குறைவாக இருக்கின்றது.

தங்களின் மரணத்திற்குப் பிறகு தங்களின் உடல் உறுப்புக்களைத் தானம் செய்வதற்கு பதிந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 300,000க்கும் குறைவாகவே இருக்கிறது.

மாற்று சிறுநீரகத்தைப் பொருத்துவதற்கு ஒரு டயாலிசிஸ் நோயாளி 12லிருந்து 15 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. இது 60 வயதுக்கும் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும். 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் காத்திருக்கும் பட்டியலிலிருந்து விடுபட்டு போகிறார்கள். இவ்வாறு நீண்ட காலத்திற்கு காத்திருப்பதால் சம்பந்தப்பட்ட நோயாளிகள் பலவிதமான நோய்களின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். அதில் இருதயம் தொடர்பான நோய்களும் அடங்கும். பல சிறுநீரக நோயாளிகள் மாரடைப்பாலும் பக்கவாதத்தாலும் இறந்து விடுகின்றனர் என்று டாக்டர் ஃபாட்ஹிலினா கூறினார்.

மலேசியாவில் உள்ள சட்டங்களின்படி உடல் உறுப்புகளைத் தானம் செய்வதற்கு பதிவு செய்தவர்கள் மரணமடைந்த பிறகும் அவர்களின் வாரிசு உடல் உறுப்புகளை எடுப்பதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும். பல வாரிசுகளிடமிருந்து அத்தகைய சம்மதங்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது என்று ஃபாட்ஹிலினா மேலும் கூறினார்.